**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 346 of 2012**

**Deposition of Witness P. W.7**

| | |
|---|---|
| **Name : சதீஷ்பாபு** | **Father/Husband's Name: தீனதாயாளன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 22.05.2022**
**A1 Died. A2 – A4 Present.**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது பழனி அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணியுரிந்து வருகிறேன். பழனி ஆதித்யா ஆர்த்தோ மருத்துவமனைக்கு ஆலோசனைக்காக சென்று இருந்த போது 18.04.2012ம் தேதியன்று சுமார் 55 வயதுள்ள தங்கவேல் என்ற நபரை பரிசோதனை செய்தேன். அவருக்கு 17.04.2012ம் தேதியன்று இரவு 07.30 மணிக்கு அடையாளம் தெரிந்த 5 நபர்களால் தாக்கப்பட்டு இடது தொடையில் வலி இருப்பதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் இடது இடுப்பு எலும்பு முறிந்து இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்றளித்தேன். **காயச்சான்று அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

2. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவதற்கு மறுநாள் தான் மேற்படி தங்கவேல் என்பவர் சிகிச்சைக்கு வந்தார் என்றால் சரிதான். மேற்படி நபர் என்னிடம் சிகிச்சை பெறுவதற்கு முன்பாக பழனி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றுள்ளார்.

3. நான் பரிசோதித்த போது தங்கவேல் மது போதையில் இல்லை. சம்பவம் நடந்த போது அவர் மதுபோதையில் இருந்தாரா என்று என்னிடம் சிகிச்சைக்கு வந்த போது

என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். தங்கவேலுக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் மதுபோதையில் தடுமாறி கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2023.05.26 12:28:01 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி